# பாவ மன்னிப்பின் மேன்மை




**2 சாமுவேல் 11 அதிகாரத்தில்** தாவீது பத்சேபாளிடத்தில் பாவத்திற்குட்பட்ட பின்பு, நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவன் பாவத்தை உணர்த்தின போது, **51 ஆம் சங்கீதத்தை** தாவீது பாடி, ஆண்டவரிடத்தில் இருந்து முழுமையாக பாவமன்னிப்பை பெற்றுக் கொண்டார். ஆவிக்குரிய பிரகாரமாக அவருடைய மேன்மையில் ஒரு குறைவும் ஏற்படவில்லை. அவர் தொடர்ந்து ஆண்டவருக்கு பிரியமானவராக இருந்தார். ஆண்டவருடைய சித்தத்தை செய்தார். அவருடைய விருப்பமாகிய தேவாலயம் அவருடைய குமாரனாகிய (பத்சேபாள் மூலமாய் பிறந்த) சாலொமோன் ராஜா காலத்தில் கட்டப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, புதிய ஏற்பாடு **"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (மத் 1:1)** என்றே ஆரம்பிக்கிறது.

எனவே அவருடைய ஆவிக்குரிய நிலையில் எந்த தொய்வும் அவருடைய பாவத்தால் ஏற்படாவிட்டாலும், **2 சாமு 12:9-12 வசனங்களில் "கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டைபண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய். இப்போதும் நீ என்னை அசட்டைபண்ணி, ஏத்தியனாகிய உரியாவின் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டபடியினால், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உன் வீட்டிலே பொல்லாப்பை உன்மேல் எழும்பப்பண்ணி, உன் கண்கள் பார்க்க, உன் ஸ்திரீகளை எடுத்து, உனக்கு அடுத்தவனுக்குக் கொடுப்பேன்; அவன் இந்தச் சூரியனுடைய வெளிச்சத்திலே உன் ஸ்திரீகளோடே சயனிப்பான். நீ ஒளிப்பிடத்தில் அதைச் செய்தாய்; நானோ இந்தக் காரியத்தை இஸ்ரவேலர் எல்லாருக்கு முன்பாகவும், சூரியனுக்கு முன்பாகவும் செய்விப்பேன் என்றார் என்று சொன்னான்."** என்று

கூறப்பட்டுள்ள அவருடைய பாவத்தின், அனைத்து பின் விளைவுகளும் ஒன்று விடாமல் அவருடைய சரீர பிரகாரமான வாழ்க்கையில் நிறைவேறின. ஆவியிலும், ஆத்துமாவிலும், தேவனுடைய பாவ மன்னிப்பையும், ஐக்கியத்தையும், அவர் உணர்ந்தாலும் சரீர பிரகாரமாக அவருடைய பின்னான காலங்களை மேற்கூறிய தண்டனையின் வழியாகவே கடந்து சென்றார். எனவே பாவ மன்னிப்பை ஆவியிலும் ஆத்மாவிலும் பெற்று மகிழ்ந்த பொழுதும், சரீர பிரகாரமாக பாவத்தின் பின் விளைவுகளை அவர் எதிர்கொள்ள நேர்ந்தது. எனவே தேவன் அவரை மனதார மன்னித்தபொழுதும், அதன் தண்டனையை சரீர பிரகாரமாக தாவீது கடந்து செல்ல தேவன் அனுமதித்தார்.

ஆனால் புதிய ஏற்பாட்டில் முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவானை யூதர்கள் கல்லெறிந்து கொன்ற பொழுது, அவர்கள் வஸ்திரங்களை காத்த சவுல் **(அப் 7:58)**, **"இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலைசெய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்." (அப் 9:1,2)**. ஆனால் ஆண்டவர் அவரை சந்தித்தார், தேவப்பிள்ளைகளை துன்புறுத்துவதால் உண்மையில் துன்பப்படுவது தான் தாம் என்பதை கூறினார் **(அப் 9:4)**. மேலும் பவுலாகிய சவுலை குறித்த திட்டத்தையும், **அப் 9:15,16 வசனங்களில் "அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்."**. இதனால் அவருடைய வாழ்க்கை முற்றிலுமாக மாற்றப்பட்டது. அவருடைய முந்தைய வாழ்க்கையின் பாவங்கள் மன்னிக்கப்பட்டது மட்டுமல்ல, அவற்றின் எந்த ஒரு பின் வளைவும் தாவீதைப் போல் அவரை பாதிக்கவில்லை. அவர் தன் பிந்தைய நாட்களில் சரீரத்தில் பாடுபட்டாலும், அது தேவனுக்கு மகிமையை தான் கொண்டு வந்ததே தவிர, அது பாவ சாபத்தினால் அல்ல.

தாவீதின் இடத்தில் நாத்தானை அனுப்பியதை காட்டிலும், ஆண்டவரே நேரில் தோன்றி **"அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்." (அப் 9:5)** என்று கூறிய பொழுதிலும், சவுல் நேரடியாக ஆண்டவருடைய இருதயத்தையே வேதனைப்படுத்திய பொழுதிலும், சவுலுக்கு கிடைத்த பாவ மன்னிப்பு, பாவத்தின் பின் விளைவுகளை அவருக்கு ஏற்படுத்தவில்லை. காரணம் அவருடைய பாவம் மன்னிக்கப்பட்டது மாத்திரமல்ல அதற்கான கிரயமும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மூலமாக செலுத்தப்பட்டு விட்டது. பழைய ஏற்பாட்டிலும் ஆண்டவர் பாவங்களை மன்னித்தார், ஆனால் அதற்கான பரிகாரம் நியாயப்பிரமாணம் மூலமாய் செலுத்தப்பட்டது. மேலும் அதற்கான பின்விளைவுகளையும் சந்திக்க நேர்ந்தது. அதையும் ஆண்டவர் நாத்தான் தீர்க்கதரிசி மூலமாய் தாவீதிடம் கூறினார்.

ஆனால் புதிய ஏற்பாட்டிலோ அப்படியல்ல, ஆண்டவர் நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து, உயிர்த்தெழுந்து நம் பாவங்கள், அதனால் உண்டாகி சாபங்கள், எல்லாவற்றையும் நீக்கிவிட்டார். பழைய ஏற்பாட்டில் பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பும் அதன் விளைவுகள் தொடர்ந்து கொண்டே இருந்தது. மேலும் இஸ்ரவேல் மக்களிடத்திலும் இதே நிலையே காணப்பட்டது. அவர்கள் ஒரு தேசமாக பாவத்தில் விழுவதும், அதனால் அடிமைத்தனத்துக்கு உட்படுவதும், பிறகு மன்னிப்பை பெறுவதும் என்று மாறி மாறி நடந்து கொண்டுதான் இருந்தது. இதனை **எபிரேயர் 10:1-3 வசனங்களில் "இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது."** என்று நாம் காணலாம்.

இங்கு நாம் கற்றுக் கொள்கிற சத்தியம் என்னவென்றால் பழைய ஏற்பாட்டின் காலத்தில் கொடுக்கப்பட்ட பாவமன்னிப்பு, அவர்களை மேலும் பாவம் செய்யாமல் தடுக்கவில்லை, மேலும் பாவத்தினால் உண்டாகிய பின்விளைவுகளை, சாபங்களை அவர்களின் வாழ்வில் தடை செய்யவும் இல்லை. ஆனால் புதிய ஏற்பாட்டில், ஆண்டவர் நமக்கு கொடுக்கும் பாவமன்னிப்பு நம்மை வெளிச்சத்தின் பிள்ளைகளாய் தேவனுடைய பிள்ளைகளாய் மாற்றுகிறது. தேவனை அப்பா பிதாவே என்று கூப்பிட்ட தக்க புத்திர சுகாதாரத்தை நமக்கு தருகிறது. மேலும் **எபிரேயர் 9:25-28 வசனங்களில் "பிரதான ஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்.",** என்று நாம் காண்கிறபடி, கிறிஸ்து ஒரே தரம் நமக்காக பலியிடப்பட்டார் என்றும், அந்த பலியினால் உண்டாகிய பாவ மன்னிப்பை நாம் பெற்றிருக்கிறோம் என்றும், இனி அவருடைய வருகைக்கு நாம் காத்திருக்க வேண்டியது என்றும் கூறுகிறது.

பழைய ஏற்பாட்டில் தேவன் சில வேலைகளில் மனஸ்தாபப்பட்டு மனதிறங்கி பாவமன்னிப்பை அருளினார். அதை தவிர நியாயபிரமான

மூலமாய் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ள வழி உண்டாக்கினார். ஆனால் அது எதுவும் அவர்களை முழுமையாக பாவத்தின் பிரசன்னத்திலிருந்து, அதன் சாபத்தில் இருந்து விடுவிக்கவில்லை. ஆனால் கிறிஸ்துவின் இரத்தமோ விலையேறபெற்றது. அதனால் நம் பாவ, சாப நோய்கள் அனைத்திலிருந்தும், நம் ஆவி ஆத்துமா மற்றும் சரீரம் முழுவதும் விடுதலை பெற்றுக் கொள்கிறது. அதன் பின்பு பாவத்தால் நம்மை ஆள முடியாது. நாம் கிறிஸ்துவுக்கே கீழ்படிகிற அடிமைகளாய் மாறிப்போகிறோம். ஆனால் ஒருவேளை **எபிரேயர் 6:4-6 வசனங்களில் "ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்."** என்று கூறப்பட்டுள்ளபடி, இப்படிப்பட்ட நிலை உருவாகும்மானால், அதன் முடிவு பயங்கரமாய் இருக்கும் இதனை நாம் **அப்போஸ்தலர் 5 ஆம் அதிகாரத்தில்** அனனியா சப்பீராளின் வாழ்வில் காண்கிறோம்.

எனவே பழைய ஏற்பாட்டில் தாவீது தன் பாவத்தின் விளைவுகளை சந்தித்தாலும், ஆண்டவர் அருளிய மன்னிப்பினால் பரலோகம் சென்றடைந்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் முழுமையான விடுதலையை நாம் ஆண்டவருடைய இரத்தத்தின் மூலமாய் பெற்று இருந்தாலும், **2 பேதுரு 2:20-21 வசனங்களில் "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்."** என்று கூறப்பட்டுள்ள எச்சரிப்பை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையேல் **எபிரேயர் 10:28,29 வசனங்களில் "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்."** என்று கூறப்பட்டுள்ள காரியங்களே நடந்தேறும். எனவே ஆண்டவருடைய இரத்தத்தால் இலவசமாய் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பாவமன்னிப்பின் மேன்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதை சரியாக பற்றிக்கொள்வோமானால் நித்திய வாழ்வை நாம் நிச்சயம் பெற்றுக் கொள்வோம். ஆனால் அதை இழந்து போனால் நித்திய அழிவை தான் சந்திக்க நேரிடும். எனவே நமக்கு அருளப்பட்டிருக்கிற பாவ மன்னிப்பின் மேன்மையை உணர்ந்து, அதனால் நமக்கு கிடைத்திருக்கிற

மகிமையான வாழ்வை நாம் காத்துக் கொண்டு, நித்திய ஜீவக்கரை சென்றடைவோமாக. ஆமென், அல்லேலூயா.